<u>முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.</u>

அ.வ. எண். 341/2023

| | | |
|---|---|---|
| வாதி தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | ஜெயராஜ் |
| தகப்பனார் / கணவர் பெயர் | .. | |
| வயது | .. | |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | |
| தாலுக்கா | .. | |

2025 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 24ஆம் நாள் வியாழக்கிழமை திரு. நா. சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

பண மோசடி என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி எனக்கு பள்ளி தோழர். நான் தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். பிரதிவாதி என்ன படித்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது, ஆனால் 9ம் வகுப்புவரை என்னுடன் படித்தார். பிரதிவாதி என்ன படித்தார் என்று தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை அவர் கிராமங்களில் குடிநீர் விநியோகம் செய்யும் பணியில் இருக்கிறார். பிரதிவாதி எங்கு வசித்து வருகிறார் என்றால் சோதியம்பாக்கத்தில் வசித்து வருகிறார். சாட்சிகள் முன்னிலையில் தான் பிரதிவாதி கடன்வாங்கினாரா என்றால் சரிதான். நான் மாதம் ரூ.2.00 வட்டிக்கு தான் கொடுத்தேன்.கடன்வாங்கியதற்கு வட்டி எதுவும் செலுத்தவில்லை. அதற்கு சட்ட அறிவிப்பு எதுவும் பிரதிவாதிக்கு அனுப்பினேனா என்றால் இல்லை. பிரதிவாதி குடும்ப செலவிற்கு என்று பணம் கேட்டார். மேற்படி கடனுறுதி சீட்டினை யார் தயார் செய்தார் என்றால் பிரதிவாதி தான் வாங்கி தயார் செய்து

கொண்டுவந்தார். பாண்டு தயார் செய்யும்போது உடன் இருந்தேனா என்றால் அவர் தயார் செய்துகொண்டுவந்தார். கடனுறுதி சீட்டை படித்துபார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். ஆனால் சிலம்பரசன் பெயரில் தான் பத்திரம் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் சாட்சிகளில் அப்பா பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி கையெழுத்து எப்படி போடுவார் என்றால் தமிழிலும் கையொப்பம் செய்வார், ஆங்கிலத்திலும் கையொப்பம் செய்வார். பிரதிவாதி தன்னுடைய வக்காலத்து மற்றும் பதில் எதிர்வழக்குரையில் ஆங்கிலத்தில் தான் கையொப்பம் செய்திருக்கிறார் என்றால் ஏமாற்றும் நோக்குடன் கையொப்பம் செய்திருக்கிறார். அதேபோல நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் பிரதிவாதி பெற்றுக்ொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டையில் ஆங்கிலத்தில் கையொப்பம் செய்தள்ளார் என்றால் சரிதான்.ஏமாற்றும் நோக்குடன் கையொப்பம் செய்திருக்கிறார். மேற்படி விவரத்தை நான் வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி பத்திரம் தூசி ஊரில் வாங்கப்பட்டது. மேற்படி பத்திரம் எந்த தேதியில் வாங்கப்பட்டது என்று சொல்லமுடியுமா என்றால் சொல்லமுடியும். 19.05.2021ல் வாங்கப்பட்டது. நான் சொல்லும் காலக்கட்டம் கொரோனா காலகட்டம் என்றும் அந்த காலகட்டத்தில் அத்தியாவசிய கடைகளை தவிர பத்திரங்கள் சம்மந்தமாக விற்பனை தடைசெய்யப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு பணம் எவ்வாறு கொடுத்தேன் என்றால் ரொக்கமாக கொடுத்தேன். இதற்கு முன்பாக பிரதிவாதியிடம் கொடுக்கல் வாங்கல் ஏதாவது இருக்கிறதா என்றால் இல்லை. இந்த பாண்டில் கையொப்பமிட்ட சாட்சிகளை விசரிக்க தயாராக இருக்கிறேனா என்றால் இருக்கிறேன். நான் தான் பாண்டை வாங்கினேன் என்றும் அதனை நாங்கள் தான் தயார் செய்தோம் என்றால் சரியல்ல. நான் கடன் கொடுக்கும்போது தட்டச்சு செய்து பாண்டு கொடுத்தீர்களா என்று கேட்டீர்களா என்றால் இல்லை. பிரதிவாதி ரூ.50,000/-தான் கடன் வாங்கினார் என்றும், ரூ2,00,000/- கடன் வாங்கவில்லை என்றும் நாங்கள்

பொய்யாக ஸ்டேம்பு பேப்பரில் எழுதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. மேலும் பிரதிவாதி அவர் வாங்கிய ரூ.50,000/-ஐ செலுத்த தயாராக இருக்கிறார் என்றால் சரியல்ல. அவர் ரூ.2,00,000/- வாங்கினார். பிரதிவாதி சிறு விவசாயி என்றும் அவர் தினக்கூலிதான் செய்கிறார் என்றால் சரியல்ல. நான் பொய்யாக பிரதிவாதி மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி உண்மையான சங்கதிகளை கொண்டுதான் இந்த பதிலுரை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கு பிரதிவாதிக்கு எதிராக தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.